செ.வெ.எண்.49 நாள்:19.09.2017

**திருநெல்வேலி வண்ணார்பேட்டை எப்.எக்ஸ் பொறியியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தனியார் சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் 7.10.2017 அன்று நடத்துதல் தொடர்பான ஒருங்கிணைப்பு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் திருநெல்வேலி வண்ணார்பேட்டை எப்.எக்ஸ் பொறியியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் தனியார் சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் 7.10.2017 அன்று நடத்துதல் தொடர்பான ஒருங்கிணைப்பு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (19.09.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், அரசுத் துறை அலுவலர்கள், நகைக்கடை உரிமையாளர் சங்க பிரதிநிதிகள், இந்திய மருத்துவ சங்க பிரதிநிதிகள், ஹோட்டல் உரிமையாளர் சங்க பிரதிநிதிகள், ஆலை உரிமையாளர்கள் சங்க பிரதிநிதிகள், திருநெல்வேலி சிறு, குறு தொழில் வர்த்தகர்கள் சங்க கூட்டமைப்பு பிரதிநிதிகள், ராம்கோ, இந்தியா சிமிண்ட், தரணி சுகர், லெட்சுமி மில் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஜவுளிக்கடைகளின் பிரதிநிதிகள், பல்வேறு வங்கிகளின் பிரதிநிதிகள், தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்கள் உள்பட பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயன்பெறும் வகையில், 07.10.2017 அன்று வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியர் கல்லூரியில் தனியார் துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்படவுள்ளது. இத்தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 100க்கும் மேற்பட்ட வேலை அளிக்கும் நிறுவனங்கள் பங்கேற்கவும், 8000த்திற்கும் மேற்பட்ட வேலை வாய்ப்பினை எதிர்நோக்கும் இளைஞர்களும் பங்கேற்கும் வகையில் சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்முகாமில் பங்கேற்கும் மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கு சிறப்பு வசதிகள் செய்திட வேண்டும். இத்தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளும் வேலைவாய்ப்பினை எதிர்நோக்கும் இளைஞர்கள் தங்களது வேலைவாய்ப்பிற்காக, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மற்றும் OMCL (OVERSEES MNOWER CORPORATIOJN LIMITED), NCS (NATIONAL CAREER SERVICE PORTAL) ஆகியவற்றில் பதிவுகள் மேற்கொள்ளலாம்.

மேலும், தொழிற் பயிற்சி நிறுவனங்கள் வழியாக தொழிற் பழகுநர் (Apprenticeship) பயிற்சிக்கும் பதிவுகள் மேற்கொள்ள வேண்டும். இம்முகாமில் பங்கேற்க விரும்பும் வேலையளிப்பவர்கள் தங்களது நிறுவனத்தின் முகவரி, பணிக்கு தேவைப்படும் நபர்களின் எண்ணிக்கை, எதிர்பார்க்கும் கல்வித் தகுதி, மாதாந்திர ஊதியம் போன்ற விபரங்களை வரையறுக்கப்பட்ட படிவத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக மின்னஞ்சல் deo.tnv@gmail.com என்ற முகரிக்கோ அல்லது அலுவலக தொலைபேசி எண்ணிக்கு (0462-2500103) தொடர்பு கொண்டோ அல்லது நேரிலோ 26.09.2017ம் தேதிக்குள் தெரிவிக்க வேண்டும். மேலும், வேலை வாய்ப்பினை எதிர்நோக்கும் இளைஞர்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் வழங்கப்படும் பயிற்சிக்கான பதிவை www.tnskill.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யலாம்.

இத்தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் தங்களது கல்வி சான்று மற்றும் இதர சான்றுகளுடன் பங்கேற்று வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்று பயனடையுமாறும், இவ்வேலைவாய்ப்பு முகாமில் பணி நியமனம் பெறும் பதிவுதாரர்களின், வேலைவாய்ப்பு பதிவுமூப்பு இரத்து செய்யப்பட மாட்டாது. அதிகளவிலான நிறுவனங்களும் இம்முகாமில் பங்கேற்று திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் திருமதி.கெட்ஸி லீனா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு.நாகேந்திரன், மாவட்ட தொழில்மைய பொதுமேலாளர் திரு.ராஜராஜன் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள், தனியார் நிறுவனங்களின் பிரதிதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.